குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.90/2020

அ.சா.1

2025–ம் ஆண்டு நவம்பர் 11–ம் தேதி செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சிவக்குமார் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஹரிக்குமார் | தொழில் | |
| தந்தை பெயர் | முத்துசாமி | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 11.49 மணி,

Accused Mathalaimuthu present. Advocate Mr.Sabarinathan present for Advocate Mr.Balasubramanian for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் ஓமலூர் அங்காளம்மாள் கோயில் அருகே குடியிருந்து, அங்காளம்மன் கோயில் பூசாரியாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.09.2019 ஆம் தேதி இரவு 10.00 மணியளவில் எனது தாத்தா சம்பத் என்பவர் சாப்பிடுவதற்காக ஓட்டலுக்கு சென்று, சாப்பிட்டுவிட்டு, வீட்டிற்கு வருவதற்காக ஓமலூர் பேருந்து நிலையத்தில் இருந்து மேட்டுர் செல்லும் சாலையில் மேட்டுர் நோக்கி நடந்து வந்தார்.

2. பி.பி.எஸ் காம்ப்ளக்ஸ் அருகே அவர், நடந்து வந்தபோது, அவருக்கு எதிர்திசையில் மேட்டுர் பக்கமிருந்து ஓமலூர் நோக்கி டி.வி.எஸ் ஜுப்பிட்டர் இருசக்கர வாகனம் வந்து, என் தாத்தா சம்பத்தின் மீது மோதிவிட்டது. என் தாத்தாவிற்கு தலையில் காயம் ஏற்பட்டது, காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. நான் அவரை தனியார் ஆம்புலன்ஸ் மூலமாக ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தேன். அங்கு அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து, மேல்சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள்.

3. அங்கு, அவர் இரண்டு நாட்கள் சுயநினைவின்றி சிகிச்சையில் இருந்தார். அதன்பிறகு அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். சேலம் அரசு

S SHARMILA Digitally signed by S SHARMILA Date: 2025.11.11 17:31:04 +0530

மருத்துவமனையில் எனது தாத்தா சிகிச்சையில் இருந்தபோது நான் உடனிருந்தேன். அப்போது போலிசார் அங்கு வந்து விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது. ( **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

4. விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தின் பதிவெண் எனக்கு தெரியாது. சம்பவத்தின்போது விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தவரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். இருசக்கர வாகனத்தின் இரண்டு நபர்கள் வந்தார்கள். அவர்களுக்கு சுமார் 20 வயது இருக்கும். சம்பவத்தின்போது இருசக்கர வாகனம் ஓவர் ஸ்பீடாக வந்ததால் தான் விபத்து நடந்தது. விபத்தின் போது இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் நீதிமன்றத்தில் இல்லை. போலிசார் விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பு சாட்சி எதிரியின் அடையாளத்தை பொறுத்தமட்டில், பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

5. ஆஜர் எதிரிதான், விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை சம்பவத்தின்போது ஓட்டி வந்தார் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிதான் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தார், ஆனால் தற்போது நீங்கள் பொய்யாக சாட்சி அளிக்கிறீர் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி சம்பவத்தின்போது, டி.என்.30 பி.யு. 1697 என்ற பதிவெண் கொண்ட டி.வி.எஸ். ஜுபிடர் என்ற இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்து விபத்து ஏற்படுத்தினார் என்றால், சரியல்ல.

6. புகார் வாக்குமூலத்தில், நான், விபத்து ஏற்படுத்திய மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்தவரை பற்றி விசாரித்தபோது, ஆர்.சி.செட்டிப்பட்டியை சேர்ந்த ஜான் மகன் மதலைமுத்து என்று சொன்னார்கள் என்று போலிசாரிடம் சொன்னேன் என்றால் சரிதான். நான், புகார் வாக்குமூலத்தில், விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவெண் டி.என்.30 பி.யு. 1697 என்று சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். அருகில் இருந்த நண்பர்கள் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவெண்ணை பார்த்து சொன்னார்கள். அதனடிப்படையில் சொன்னேன்.

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.11.11 17:31:09 +0530

7. ஆஜர் எதிரி தான், மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்து, விபத்து ஏற்படுத்தினார் என்றும், விபத்து நடந்து பல வருடங்கள் ஆனதால், தற்போது எனக்கு விபத்து ஏற்படுத்திய நபரின் அடையாளம் குறித்த நினைவு இல்லாத காரணத்தினால், ஆஜர் எதிரி விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டவில்லை என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 12.06 மணி.**

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.11.11 17:31:14 +0530